# இலங்கையில் முதலீடு செய்ய ஜப்பான் தயக்கம்

(கொழும்பு) இலங்கையில் வன்முறை சம்பவங்கள் அதிகரித்து வருவதினால் இங்கு அதிகளவு முதலீடுகளைச் செய்வது பற்றி சிந்திக்க வேண்டி இருக்கின்றது. இவ்வாறு இலங்கை வந்த (4-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 8 இதழ் 28
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 23 — 11 — 1992

## மாவீரர்தின 2-வது நாள் சிறப்பாக அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்) தமிழீழப் பிரதேசமெங்கும் இரண்டாவது நாளாக மாவீரர் தினநாள் வெகு சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது.

மக்கள் மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு மலர் தூவி இரவுவரை தீபங்கள் தொடர்ச்சியாக ஏற்றியபடியிருந்தனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## செம்மணிப் பகுதியில் 'ஆனையிறவு ராணுவமுகாம்'

(யாழ்ப்பாணம்) செம்மணிப் பகுதியில் ஆனையிறவு ராணுவமுகாமும் அதன்மீது விடுதலைப்புலிகள் சுற்றிவளைத்து தாக்குதல் நடத்துவதும் போன்ற மாதிரி முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தத்ரூபமாக அமைக்கப்பட்

(4-ம் பக்க பார்க்க)

★ வடக்கு-கிழக்கில் போரிடும் நிலை மாறி

# தென்பகுதியைப் பாதுகாக்கும் நிலையில் ஸ்ரீலங்கா அரசு தவிப்பு

## யுத்த நிறுத்தம் செய்யும் நிர்ப்பந்தம் ஏற்படும்!

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதிகளை விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்பதற்குப் போரிட்டு வரும் நிலைமை மாறி, நாட்டின் ஏனைய பகுதிகளைப் புலிகளின் தாக்குதல்களிலிருந்தும், அச்சுறுத்தல்களிலிருந்தும் பாதுகாப்பதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளும் நிலைக்கு ஸ்ரீலங்கா அரசு தற்போது தள்ளப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக விரைவில் யுத்த நிறுத்தம் ஒன்றைச் செய்யும் நிர்ப்பந்த நிலைக்கு ஸ்ரீலங்காப் படையினரும் உட்படுத்தப்படலாம் எனக் கொழும்பில் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

(4-ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு பிரச்னை அரசு திணறுகிறது

(கொழும்பு) கோடிக்கணக்கானபணத்தை யுத்தத்துக்கு செலவிட்ட போதிலும், அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் ஆகக்குறைந்த பாதுகாப்பாவது வழங்கமுடியாது அரசாங்கம்திணறுகிறது

(4-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நகரில் அதிரடிப்படை குவிப்பு

(கொழும்பு) கொழும்பிலும் முக்கிய நகரங்களிலும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் விஷேட அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டு, அவற்றின் பாதுகாப்பு பலப்படுத

(4ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் வசிக்கும் சகலரும் பொலிஸிடம் தமது பெயர் விபரம் சமர்ப்பிக்க வேண்டும்

(கொழும்பு) கொழும்பில் வசிக்கும் சகலரும் தமது பெயர் விபரங்களை பொலிஸாரிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

கொழும்பில் வீடுகளில் தங்கி இருப்போர் பற்றிய புதிய பிரமாணம் ஒன்று அவசரகாலச் சட்டத்தின் கீழ் நேற்று நள்ளிரவில் இருந்து அமுல் செய்யப்பட்டுள்ளது என்று நேற்று ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பிரமாணத்துக்கு அமைய ஏதேனும் ஒரு இடத்தில் வசிக்கும் ஒவ்வொரு குடியிருப்பாளரும் தமது வீட்டில்

(4-ம் பக்கம் பார்க்க)

## கல்முனை பஸ்ஸில் பார்சல் குண்டு

(கொழும்பு) கல்முனையில் நேற்று பஸ் ஒன்றில், பார்சல் குண்டு ஒன்று தக்க சமயத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

(4ம் பக்கம் பார்க்க)

## முக்கிய பிரமுகர்களுக்கு பலத்த பாதுகாப்பு

(கொழும்பு) கொழும்பில் முக்கிய பிரமுகர்கள், அரசியல்வாதிகளுக்கான பாதுகாப்புப் பெருமளவில் பலப்படுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## பொம்மர்கள் நோட்டம்

(புலோலி) பருத்தித்துறையையும் அதனை அண்டிய அல்வாய், புலோலி பகுதிகளையும் மூன்று பொம்மர் விமானங்கள் நேற்றுக் காலை 9-30 மணி

(4ம் பக்கம் பார்க்க)

## ஈழநாடு முன்னாள் ஆசிரியர் சபாரத்தினம் காலமானர்

(யாழ்ப்பாணம்)

''ஈழநாடு'' பத்திரிகையின் முன்னாள் நிர்வாக ஆசிரியர் திரு ந. சபாரத்தினம் அவர்கள் நேற்று பிற்பகல் காலமானர் என்பதை ஆழ்ந்த கவலையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சில வருடங்களாக நோய்வாய்ப்பட்டிருந்த அவர் தமது எண்பத்திரெண்டாவது வயதில் நேற்று தமது யாழ்ப்பாண இல்லத்தில் காலமானர்.

இவர் தமது பத்தொன்பதாவது வயதில் மாணவர் காங்கிரஸ் அமைப்பை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முதவை உறுப்பினராகவும், யாழ்ப்பாண மாநகரசபை பொது நூலக ''கல்விமான் குழு'' விலும் தன்பணியை மேம்படுத்திய பெருந்தகையாவார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## போராளிகளின் புகழுடல்கள் ஏன் புதைகக்கப்படவேண்டும்

(யாழ்ப்பாணம்)

வீர மரணம் அடையும் புலி வீரர்களது உடல்கள் இனிமேல் தகனம் செய்யப்படமாட்டாது. அவைகள் புதைக்கப்படவேண்டும் என நாம் முடிவெடுத்துள்ளோம். இம் முடிவானது போராளிகளுவ் மிகப் பெரும்பாலானேரின் விருப்பத்திற்கு இணங்கவே எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாவீரர்களைத் தகனம் செய்வதற்கென்று அமைக்கப்பட்ட ''மாவீரர் துயிலும் இல்லங்களில்'' இப்பொழுது மாவீரர்கள் புதைக்கப்பட்டு, அங்கே நினைவுக் கற்கள் வைக்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றன.

வீர மரணம் அடையும் புலி வீரர்களின் உடல்கள் புதைக்கப்பட்ட இடத்தில், அவ்வப் போராளிகளின் பெயர் கூறும் கல்லறைகள் எழுப்பப்பட்டு, அவை தேசிய நினைவுச் சின்னங்களாகப் பாதுகாக்கப்படும். இவைகள் காலகாலமாக எமது போராட்ட வரலாற்றைச் சொல்லிக் கொண்டே இருக்கு

(3ம் பக்கம் [illegible])

## வரி விளம்பரம்

**முடக்கொத்தான் குளிகை**

முடக்கொத்தான் இலையில் தயாரித்த Welpenla Capsules கிடைக்குமிடம்: எஸ். ரி. மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6992)

**பாகற்காய் குளிகை**

சலரோக நோயைக் கட்டுப்படுத்தக்கூடிய Karawilla Capsules. கிடைக்குமிடம்: எஸ். ரீ. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6951)

**முதலாம்பிள்ளை**

பரிசளிப்பதற்கேற்ற, சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற நூல் அராலியூர் சுந்தரம்பிள்ளை எழுதிய முதலாம்பிள்ளை 30 ரூபா கழிவு 20 வீதம் 30, கடையிற்சுவாமி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (சி-6963)

**வகுப்புகள்**

German & English Languages — ஜெர்மனியில் பல்கலைக் கழக மேற்படிப்புகளை தொடர்வதற்கு உதவு முகமாக புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன. ஜெர்மன் பல்கலைக் கழக விலாசங்கள் பெற்றுக்கொள்ளலாம் தொடர்புகொள்க;- S Sornalingam Secretary. German Cultural Association. 4 Gopal Lane Vannarponnai. Jaffna (மனோகரா தியேட்டர் அருகாமையில்). (சி- 6990)

**தவறிவிட்டது**

காங்கேசன்துறை வீதியில் நாச்சிமார் கோவிலுக்கும் மருதனமடத்துக்கும் இடையில் C. G. - 125 (நீலநிற மட்டையுடன்) புத்தகம் தவறிவிட்டது. கண்டெடுத்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். கண்டெடுத்தவர்கள் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (சி-6996)

## மண்ணெண்ணை கடத்தியோர் கைது

(கொழும்பு)

தமிழ்நாடு இராமநாதபுரத்திலிருந்து மண்ணெண்ணை பெற்ரோல் ஆகியவற்றைக் கடத்தி வந்ததாகக் கூறப்படும் 6 பேரை இலங்கைக் கடற்படையினர் தலைமன்னார் கடலில் வைத்துக் கைதுசெய்துள்ளனர். (இ)

## வவுனியாவில் தீ விபத்து

(வவுனியா)

வவுனியா கடை வீதியிலுள்ள வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமைச் செயலக நிர்வாகப் பகுதி கடந்த வியாழன் இரவு தீப்பற்றியது

அயலவரும் பொலிசாரும் இத்தீயை அணைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது

மின் ஒழுக்குக் காரணமாக இந்தக் கட்டிடத்தில் தீப்பிடித்துக் கொண்டதாகக் கூறப்படுகிறது. (இ)

# மீட்புநிதி கடன் மீளளிப்பு இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு பின்வரும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இன்று 23-ம் திகதி வழங்கப்படவுள்ளது.

நல்லூரில் நாவலர் வீதியில் உள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் காலை 8 மணி தொடக்கம் 9 மணி வரைக்கும் இதே மண்டபத்தில் யாழ்ப்பாணம், காரைநகர் வேலணை ஆகிய பகுதிகளிலுள்ளவர்களுக்கு காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரைக்கும் கோப்பாய்ப் பகுதியினருக்கு 10-15 மணி தொடக்கம் 11-15 வரைக்கும், உடுவில் பகுதியினருக்கு 11-15 தொடக்கம் 12-15 வரைக்கும் வழங்கப்படும்.

தெல்லிப்பழை, சங்கானை, மானிப்பாய் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் பிற்பகல் 3 மணி தொடக்கம் 4 மணி வரை வழங்கப்படும்.

இதேவேளை சாவகச்சேரி உ. அ. அ. பிரிவிற்கான மீட்புநிதி கடன் மீளளிப்பு நாளை 24ம் திகதி காலை 9-00 மணிமுதல் 10 00 மணி வரை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு உ. அ. அ. பிரிவுக்கு பி. ப. 2-15 முதல் 3-30 வரை பருத்தித்துறை வட இந்துமகளிர் கல்லூரியிலும் இந்த கரவெட்டிக்கு பி. ப. 3-30 முதல் 4-30 வரை வழங்கப்படும். (வி)

## பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

தென்புலோலி புற்றளை மகாவித்தியாலய பரிசளிப்பு விழா எதிர்வரும் 25-ம் திகதி வித்தியாலய அதிபர் ஏ. யோகுவா தலைமையில் நடைபெறவுள்ளது. (52)


UNIVERSITY OF JAFFNA

Tender Notice

Tenders are invited from Contractors registered for Civil Engineering works with University of Jaffna or ICTAD for

"Improvements to Vithiananthan Library"

Tender forms can be obtained from Works Engineer University of Jaffna from 24-11-92 - 27-11-92 on producing receipt from Bursar, University of Jaffna for the payment of the of following tender fee,

a) Refundable Rs 3000-

b) Non - refundable Rs. 250-

Tender should be sent to reach Registrar, University of Jaffna not later than 10-00 a.m on 1992-12-10.

Tender forms can be inspected free of charge at Planning Branch, University of Jaffna during office hours.

Tender Board, University of Jaffna reserves the right to reject any tender.

REGISTRAR.

University of Jaffna, P. O. Box 57. Jaffna. (A-2603)


## குமணா கப்பல் நாளை வரும்

(திருநெல்வேலி)

குமணக் கப்பல் நாளை 24-ந் திகதி கொழும்பிலிருந்து பருத்தித்துறையை வந்தடையும் என தெரிவிக்கப்படுகிறது.

இக்கப்பலில் தபால் பொதிகள் மற்றும் டிசம்பரில் நடைபெறவுள்ள க. பொ. த. சாதாரணப் பரீட்சைக்கான வினாத்தாள் ஆகியவற்றுடன் அத்தியாவசிய உணவுப் பொருட்களும் வரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (157)

## தையல் மெஷின் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளினால் கணவர்மாரை இழந்த விதவைப்பெண்களுக்கு புதிய தையல் மெஷின்களை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் அன்பளிப்புச் செய்துள்ளது.

டச் இன்டசேர் நிறுவனத்தின் உதவியுடன் மேற்படி நிதியம் கல்வியங்காட்டிலுள்ள தமது காரியாலயத்தில் வைத்து அண்மையில் 35 தையல் மெஷின்களை விதவைப் பெண்களுக்கு அன்பளிப்புச் செய்தனர். (வி)

## இராசி பலன்

23-11-1992

(தமிழுக்கு கார்த்திகை 08)

திங்கட்கிழமை

சதுர்த்தசி பி.ப. 4-20 வரை சுவாதி காலை 6-47 வரை அமிர்தயோகம், இராகுகாலம் காலை 7-41 முதல் 9-11 வரை சுபநேரம் பகல் 12-11 முதல் 1-41 வரை.

மேடம்: உறவினர் மூலம் நன்மை, பணவரவு, பொதுப் பணி.

இடபம்: சந்துருநாசம், மனச்சந்தோஸம், காரியசித்தி

மிதுனம்: பயணதடங்கல், அதிக யோசனை, பணமுடை.

கடகம்: உறவில் விரிசல் தொழில் நஷ்டம், வெறுப்பு.

சிங்கம்: தொழில் புகழ், அதிக வருவாய், மனைவியால் துணை.

கன்னி: அதிகாரிகள் சினம், விவாகம், சுபசெலவுகள்.

துலாம்: சுபகாரியம் நண்பர் வரவு, அதிக பரவசம்.

விருச்சிகம்: விதண்டா வாதம் காரிய வாக்கியம், அலைச்சல்.

தனுசு: தவறான செய்கை, மனக்களிப்பு, புத்திரர் பெருமை.

மகரம்: பணியாள் உதவி, வாக்குவன்மை, பாராட்டு

கும்பம்: பதட்டம், தொழில் கஸ்டம், மனச்சுமை.

மீனம்: அலங்காரம், குடும்ப வெறுப்பு, அமைதிக் குறைவு.

— ஜோஸ்யர்

# பாகிஸ்தான் அரசுக்கு எதிராக ரயில் பேரணி நடத்த பெனுஸிர் முடிவு

(மணிலா)

பாகிஸ்தான் எதிர்க்கட்சித் தலைவி பெனுஸிர் பூட்டோ ரயில் பேரணியொன்றை அடுத்த வாரம் நடத்தப்போவதாக தெரிவித்துள்ளார்

சுமார் 1, 600 கிலோ மீட்டர் அளவு நாடுமுழுவதும் ரயிலிலேயே பயணம் செய்து ஆங்காங்கே மக்கள் மத்தியில் பாகிஸ்தான் அரசின்போக்குக்குறித்து பேசி மக்கள் ஆதரவைத்திரட்டப் போவதாக அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

ஏற்கனவே பல இடங்களுக்கு பெனுஸிர்செல்ல தடைவிதித்திருக்கும் பாகிஸ்தான் அரசு ரயில் பேரணியை அனுமதிப்பது கடினமே என நம்பப்படுகிறது. (இ)

## இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் நல்லலக்ஷ்மி வீதியில் அமைந்திருக்கும் சாயி மண்டலியில் ஸ்ரீ சத்ய சாயி பகவானின் 67-வது பிறந்த தின விழா, இன்று திங்கட்கிழமை நடைபெற உள்ளது. அதிகாலை ஓம்காரம், சுப்ரபாதத்துடன் நல்லூர் கோவில் வீதியில் நகர சங்கீர்த்தனமும், மாலை 2-30 மணி தொடக்கம் பாதபூசை பண்ணிசை சிறுவர் நிகழ்ச்சிகள் பஜனை ஆகியவையும் இடம்பெறும் (56)

0 0 0

(உடுவில்)

கந்தரோடை வற்ருக்கை அம்மன் கோவிலில் கார்த்திகைத் திங்கள் சோமவாரத் திருவிழா இன்று பிற்பகல் நடைபெற உள்ளது. (109)

0 0 0

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீசத்தியசாயி பாபாவின் 67வது பிறந்ததினக்கொண்டாட்டம் இன்று 23ம் திகதி திங்கட்கிழமை திருநெல்வேலி சேர். பொன் இராமநாதன் வீதி, பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா சமித்தி மண்டபத்தில் நடைபெறும்.

0 0 0

(கொழும்புத்துறை)

யாழ். மத்திய கல்லூரில் மாவீரர் வார நினைவுவிழா இன்று 23ம் திகதி திங்கட்கிழமை காலை 9-00 மணியளவில் கல்லூரி அதிபர் திரு நா. க, சண்முகநாத பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு, இளம்பரிதியும் சிறப்புவிருந்தினராக பிரதம கல்விப் பணிப்பாளர் திரு. திரு, சோ. வேலாயுதமும் கலந்துகொள்ள உள்ளனர் (154)

## தொலைக்காட்சி சேவை

(கொழும்பு)

எம். ரி வி. தொலைக்காட்சி சேவையைப்போல மற்றொரு புதிய தொலைக்காட்சிசேவை ஒன்று இலங்கை-யப்பான் கூட்டுமுயற்சியில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. (இ)

## சிறுவன் நீரில் மூழ்கி மரணம்

(வட்டுக்கோட்டை)

கிணற்றிற்கு அருகில் விளையாடிய 5 வயதுச சிறுவன் கிணற்றில் தவறிவிழுந்து நீரில் மூழ்கி மரணமான சம்பவம் கடந்த சனிக்கிழமை ஆனைக்கோட்டையில் நடைபெற்றுள்ளது.

ஆனைக்கோட்டை முள்ளி ஒழுங்கைச்சேர்ந்த உசந்தன் என்பவரே இவ்வாறு மரணமானவராவார். (139)

## மாவீரர் நினைவு தினக் கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் வாரத்தை முன்னிட்டு யாழ் மாவட்டகோட்ட மட்டத்தில் இன்று நடைபெறும் கூட்டங்களின் விபரம் வருமாறு:

சங்கானை — வழுக்கம்பரை அம்மன் கோவில், தெல்லிப்பழை — மல்லாகம் பழம் பிள்ளையார் கோவில்

தென்மராட்சி கோட்டம் — சரசாலை கமலாசினி வித்தியாலயம், வேம்பொடுகேணி பாடசாலை, வடமராட்சி — பொலிகண்டிதெற்கு கொற்றுவத்தை பாடசாலை.

யாழ்ப்பாணம் — வைத்தீஸ்வரா வித்தியாலயம்.

கட்டற்புலிகள் வலி, கிழக்கு — பாலஷயூர் விளையாட்டு மைதானம், வலி-வடக்கு — முனை தேவாலயம், நாகர் கோவில் முருகன் கோவில். (சி)


## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 28 09-1967

()

மண்ணிற்காக: 23-11-1990

முருகேசு மகேந்திரன் (2-ம் லெப். யேசு)

ஆண்டிரண்டு ஆனதடா தம்பி—இன்று
உன்னைத் தேடுகின்றோம் தம்பி
மக்களிற்காய் உயிர்நீத்தாய் தம்பி
மாவீரனாகிவிட்டாய் மாங்குளம் தகர்ப்பினிலே
அணையாத தீபமடா தம்பி—எமை
அணைத்திடவே வந்திடுவாய்—தம்பி
கூடியுனைக் காத்திடுவோம் என்றும்

பெற்றோர், உடன்பிறந்தோர், உறவினர்கள், நண்பர்கள்.

மகேந்திரன் வீதி, அராலி வடக்கு. சி-6995)

விற்பனையாகிறது

★ 1993-ம் வருட இரகுநாதையர் மாதக் கலண்டர்

★ 1993-ம் வருட தினக்குறிப்பு எங்கும் கிடைக்கும்.

சோதிடவிலாச புத்தகசாலை, கொக்குவில் சந்தி, கொக்குவில். (ஏ-2598)


வீணே தறிக்கும் மரங்களைத் தடுக்க நாம் விழித்தெழ வேண்டாமா?

★ எமது மண்ணில்—

## கடைசி இராணுவம் இருக்கும் வரை

# தமிழீழ போராட்டம் நீடிக்கும்

— யோகி

(உடுவில்)

''இராணுவ போராட்டத்துடன் மட்டும் நாம் நின்றுவிடவில்லை. இந்த மண்ணில் நாம் எமக்கென பலவற்றை நிறுவியுள்ளோம். எமக்கென காவல்துறையை அமைத்துள்ளோம். கல்வியியல் கழகம் அமைத்து பல பரீட்சைகளை நடத்தியுள்ளோம்.

உடுவில் நாகம்மாள் வீதியில் மாவீரர் அலிஸ்ரன் ஞாபகார்த்தமாக திறந்துவைக்கப்பட்ட அலிஸ்ரன் சனசமூக நிலையம், மாவீரர் பாலர் கல்வி நிலையம், பெண்கள் தையல் நிலையம் ஆகியவற்றின் முன்றலில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் யாழ் மாவட்ட கல்வித்துறைப் பொறுப்பாளர் திரு யோகரத்தினம் யோகி இவ்வாறு கூறினார்.

அலிஸ்ரன சனசமூக நிலையத்தை உடுவில் வட்டவை பொறுப்பாளர் திரு. கலையரசன் திறந்து வைத்தார். மாவீரர பாடசாலையை சிற்றூரவைப் பொறுப்பாளர் திரு. அன்பழகன் திறந்து வைத்தார்

திரு. ம. ஜோர்ஜ் கனகரட்ணம் தலைமையில் தமிழீழ தேசிய கொடியினை ஏற்றி வைத்து உரையாற்றிய திரு. யோகரத்தினம் யோகிமேலும் கூறுயதாவது:

பத்தாயிரம் கிலோ மீற்றரைக் கொண்டுள்ள யாழ்ப்பாண குடா நாட்டில் 500 கிலோ மீற்றர் தூரத்தில் இராணுவம் குடிகொண்டுள்ளது. தமிழீழத்திலிருந்து இராணுவம் துரத்தப்படவேண்டும். யாழ்ப்பாணம் மட்டுமல்ல தமிழீழம் முழுவதையும் நாம் மீட்டெடுக்க வேண்டும். இந்த மண்ணிலிருந்து கடைசி இராணுவவீரனை வெளியேற்றும் வரை எமது போராட்டம் நீடித்துநிலைக்கும்.

தமிழீழத்தில பல பொருளாதார அழிவுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. முக்கியமாக எமது விறகுத் தேவைக்காக பல மரங்களை வெட்டுகின்றோம். இதற்கு மாற்றாக வேறுமரங்கள் நடப்படவேண்டும். இல்லையேல் எமது பிரதேசம் விரைவில் பாலைவனமாகிவிடும். மாவீரர் நினைவாக மரங்களை நாட்டுங்கள் அவற்றை பேணி வளருங்கள்.

யாழ்ப்பாண மாவட்ட அரசியல் நிர்வாக பொறுப்பாளர் திரு. இளம்பரிதி உரையாற்றுகையில் கூறியதாவது:

மக்கள் எமக்குபோதிய ஆதரவு தருகின்ற போதிலும் எமது எண்ணங்கள், சிந்தனைகளை நன்குபுரிந்து கொள்ளவில்லை. நாம் இராணுவ போராட்டத்துடன் மட்டும் நின்றுவிடவில்லை. மக்களுக்கு தேவையானவற்றை பெற்றுக்கொடுப்பதையும் மக்களுக்கு பிரச்னையாக உள்ளவற்றை தீர்த்து வைப்பதையும் எமது பணியாகக்கொண்டுள்ளோம் மக்களுக்குத் தேவையான சகலதையும் பெற்றுக்கொடுக்க முயன்று வருகிறோம்.

மாவீரர் நினைவாக கட்டடங்களை அமைப்பதும், சிலைகள் நிறுவி அஞ்சலி செலுத்துவதுடன் நில்லாமல் போட்டி, பொறாமை, ஏற்றத்தாழ்வுகள் சமூக வேறுபாடு இல்லாத ஒரு சமுதாயத்தையே மாவீரர்கள் தமது லட்சியமாகக் கொண்டனர் அவர்களின் எண்ணங்களை நிறைவேற்ற மக்கள் முயலவேண்டும்.

திரு. கலையரசன், திரு. அன்பழகன், வண பிதா. செபஸ்ரியன் அடிகள் உட்பட பலர் உரையாற்றினார்கள். மாவீரர் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (109)

## மாவீரர் வார ஏற்பாடுகள்

### அலங்கார வளைவுகள்

(நல்லூர்)

நல்லூர் செட்டித் தெரு, கோவில் வீதி, கச்சேரியடி போன்ற பகுதிகளில் மாவீரர் தினத்தையொட்டி அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

மாவீரர் தினத்தையொட்டி வீதியோரங்களிலுள்ள புல், பூண்டுகளை வெட்டித் துப்புரவு செய்யும் பணிகளும் அவ்வப்பகுதி மக்களால் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (158)

### 15 அலங்கார வளைவுகள்

(தாளையடி)

மாவீரர் வாரத்தை முன்னிட்டு பருத்தித்துறை மருதன்கேணி வீதியில் ஒவ்வொரு பிரதான சந்திகளிலும், கடற்கரையோரக் கிராமங்களிலும் பதினைந்து அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனைவிட வடமராட்சி கிழக்கில் இடம்பெயர்ந்தோர் முகாம்களுக்கு முன்பாக அலங்கார வளைவுகளும், மாவீரர் ஞாபகார்த்தப் பந்தல்களும் அமைக்கப்பட்டுள்ளன.

மாவீரர் எழுச்சி தினத்தை முன்னிட்டு ஒவ்வொரு கிராமங்களிலும் கருத்தரங்கும், சிரமதானமும் நடைபெற்று வருகின்றன. (163)

### 114 மாவீரர் திருவுருவப்படங்கள்

(பண்டத்தரிப்பு)

மாவீரர் வாரத்தை முன்னிட்டு வண்ணார்பண்ணை ஓட்டுமடம் சந்திக்கருகாமையில் அமைக்கப்பட்டுள்ள நீண்ட அலங்காரப் பந்தலில் திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த 114 மாவீரர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டு வருகின்றது. (72)

### வர்ணக் கொடிகள்

(நெல்லியடி)

திக்கம் பகுதியில் முகப்பு வாயிலில் வர்ண நிறங்களுடைய சிறு சிறு கொடிகளும், மாவீரர் வாக்கியம் பொறிக்கப்பட்டு இரண்டு பதாதைகள் கட்டப்பட்டுள்ளன.

திக்கம் வடிசாலைப் பணியாளர்களும், கட்டைவேலி தெங்கு உற்பத்திப் பொருள் கூட்டுறவுச் சங்க கொத்தணி ஊழியர்களும் சிரமதானத்தை மேற்கொண்டனர், இப்பகுதியில் மாணுண்டிச் சந்தைவரை வடிசாலையின் அனுசரணையுடன் வர்ணக் கொடிகள் தெருவின் இருபக்கமும் கட்டப்பட்டுள்ளன.

வதிரிச் சந்தியிலும் 7 அடி உயரமான சிகரமொன்று அமைக்கப்பட்டுள்ளது. (160)

# போராளிகளின் புகழுடல்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாங்கள் வீரமரணமடைந்தால் தங்களுடைய உடல்களை ''மாவீரர் துயிலும் இல்லங்களில்'' புதைத்து அங்கே நினைவுக்கற்கள் நாட்டப்படவேண்டும் என்பதே போராளிகளின் விருப்பமாகும். இந்த விருப்பம் மிக அண்மையில் ஏற்பட்டதொன்றல்ல. இந்திய-புலிகள் போர்க்காலத்தில் வன்னிக்காட்டுக்குள்ளே போராளிகளின் இவ்விருப்பங்கள் வெளிப்படத் தொடங்கிவிட்டன

பிரதானமாக தலைவர் பிரபாகரன் அவர்கள் தங்கியிருந்த மணலாறுக் காட்டுக்குள்ளே இவ்விருப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டதுடன் செயல்வடிவங்களும் கொடுக்கப்பட்டது.

இந்திய ஆக்கிரமிப்புப் படைக்கு எதிராக கடும்சமர்கள் நடந்த இடம் மணலாறு என்பது தெரிந்ததே. இந்திய படையுடனான போரில் நாம் சந்தித்த வெற்றிக்கு அத்திவாரமாக இருந்தது மணலாற்றுக் காட்டில் நாம் கண்ட வெற்றிதான்.

இந்தச் சமர்களில் எமது போராளிகள் பெற்ற வெற்றிக்கு மணலாற்றுகாடு உறுதுணையாக இருந்தது. இதனால் தங்களுடைய போராட்ட வாழ்வில் ஒன்றறக் கலந்து - உறுதுணையாக இருந்த அந்த நிலத்திலேயே தங்களது உடல்களும் புதைக்கப்படவேண்டும் என போராளிகள் விரும்பினார்கள்.

மணலாற்றுக் காட்டுக்குள் தங்கியிருந்து போராடிய போராளிகள் பலர் தாங்கள் எங்கே சென்று போராடி வீரமரணமடைந்தாலும் தங்களது உடல்கள் மணலாற்றுக் காட்டுக்குள் தான் புதைக்கப்பட வேண்டும் என எழுத்து மூலம், வாய்மூலம் தலைவர் பிரபாகரனிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்கள். அதன்படியே அவர்களது விருப்பங்களும் நிறைவேற்றப்பட்டு வந்தன

இதன் காரணமாக இன்று மணலாற்றுக் காட்டுக்குள் பெரியதொரு ''மாவீரர் துயிலும் இல்லம்'' போராட்டக் கதைகளைக் கூறிக்கொண்டே இருக்கின்றது. இதேபோன்று மற்றைய மாவட்டங்களிலும் சிறிய சிறிய அளவுகளில் காடுகளுக்குள் போராளிகளின் கல்லறைகள் காணப்படுகின்றன.

இவ்விதம் தங்களது உடல்கள் சொந்த மண்ணுடன் கலக்கப்படவேண்டும் என்ற போராளிகளினது மனவிருப்பத்தையும் அதன் பின்னால் இருந்த ஆத்ம திருப்தியையும் பார்த்தோம். இனி போராளிகளது உடல்களை தகனம் செய்வதற்கும், புதைப்பதற்கும் இடையிலிருக்கும் மானிட உணர்வுகளையும், அதன் பிரதிபலிப்புக்களையும் மனோவியல் ரீதியாகவும் வரலாற்று ரீதியாகவும் பார்ப்போம். அப்போது பாரிய உண்மைகளை நாம் கண்டு கொள்ளலாம்.

மரபு வழியாக தமிழர்களிடம் இருந்துவரும் சம்பிரதாயங்களின்படி இறந்தவர்களை தகனம் செய்வதே வழமையென அறிந்து வைத்திருக்கின்றோம். இதற்கு விஞ்ஞான ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் சாதகமான வாதங்கள் இம்மண்ணின் விடுதலைக்காகப் போராடி வீரமரணமடைந்த போராளிகள் விடயத்தில் ஒப்புநோக்க முடியாது.

போராளிகள் தனிமனிதர்கள் அல்ல. அவர்கள் ஒரு இனத்தின் காவலர்கள். அந்த இனத்தின் வழிகாட்டிகள். ஒரு புதிய வரலாற்றைப் படைக்கும் சிருஷ்டிகர்த்தாக்கள். இவர்களது வீரச்சாவு வெறும் மரண நிகழ்வுகள் அல்ல. இவர்களது நினைவுகள் வரலாற்றுச் சின்னமாக என்றென்றும் நிலைத்து நிற்க வேண்டும். இந்தத் தியாகச் சின்னங்கள் எமது மக்களின் மனதில் காலங்காலமாக விடுதலை உணர்வை ஊட்டிக் கொண்டே இருக்கும்.

அதாவது, போராளிகளின் கல்லறைகள் மக்களின் உள்ளத்தில் சுதந்திரச்சுடரை ஏற்ற உதவும் நெருப்புக் கிடங்குகளாகவே பயன்படும்.

எனவேதான் போராளிகளது உடல்களைப் புதைத்துக் கல்லறைகளை எழுப்பி அதை என்றென்றும் உயிர்த்துடிப்புள்ள ஒரு நினைவுச் சின்னமாக நிலைநிறுத்த நாங்கள் விரும்புகின்றோம்.

இன்றுவரை 3750க்கும் மேற்பட்ட புலிவீரர்கள் வீரமரணமடைந்துவிட்டனர். இவர்களது உயிர்த்தியாகத்தால் எமது விடுதலைப் போராட்டம் உயர்ந்ததொரு கட்டத்திற்கு நகர்த்தப்பட்டுவிட்டது. ஆனால் இவர்களது நினைவை உயிர்த்துடிப்புள்ள தாக்கும் சின்னங்கள் எம்மிடம் உண்டா? எனக் கேட்டால் ''இல்லை'' என்றுதான் பதில் கிடைக்கும்.

போராளிகள் தனிமனிதர்கள் அல்ல. அவர்கள் ஒரு இனத்தின் காவலர்கள். அந்த இனத்தின் வழிகாட்டிகள். ஒரு புதிய வரலாற்றைப் படைக்கும் சிருஷ்டிகர்த்தாக்கள். இவர்களது நினைவுகள் வரலாற்றுச்சின்னமாக என்றென்றும் நிலைத்துநிற்கவேண்டும். இந்தத் தியாகச் சின்னங்கள் எமது மக்களின் மனதில் காலங்காலமாக விடுதலை உணர்வை ஊட்டிக் கொண்டே இருக்கும்.

இப்போராளிகள் அனைவருக்கும் அவர்கள் பெயர் கூறும் கல்லறைகள் கட்டப்பட்டால் அவற்றைக் காணும் அனைத்து மக்களும் சுதந்திரத்தின் பெறுமதியைப் புரிந்துகொள்வதுடன் அதை வென்றெடுக்கப் போராளிகள் கொடுத்த உயிர் விலையும் உணர்வு பூர்வமாகத் தெரிந்து கொள்வார்கள்.

அன்புக்குரிய எமது பெற்றோர்களே, மக்களே!

எமது இயக்கத்தின் இந்த முடிவை நீங்களும் ஏற்றுக் கொள்வீர்கள் என நம்புகின்றோம். இந்த முடிவை காலம் காலமாக இருந்துவந்த சம்பிரதாயம் சாஸ்திரங்களுக்கு முரணாக இருக்கின்றது என நீங்கள் கருதலாம். ஆனால் உங்களது பிள்ளைகளால் புலி வீரர்கள் இந்த சம்பிரதாயங்கள், சாஸ்திரங்கள் எல்லாவற்றையும் கடந்த நிலையில் இந்த நாட்டின் பொதுச்சொத்தாக, பொக்கிசங்களை வெறும் நினைவுகளாகவும், எண்ணிக்கைகளாகவும் மட்டும் இருக்கக்கூடாது. அவை பொருள் வடிவில் என்றென்றும் எம்மண்ணில் இருந்து கொண்டே இருக்கவேண்டும்.

இது ஒருபுறமிருக்க, எமது சகதோழர்கள் சிலரது வீரமரணத்தின் பின் நடைபெறும் சில சம்பவங்கள் எமது மனதை பாதிக்கின்றன. அதாவது பெற்றோரோ, உடன்பிறந்தவர்களோ, உறவினர்களோ இல்லாது நடைபெறும் எமது போராளிகள் இறுதிச்சடங்குகளை நாம் கண்டிக்கின்றோம்.

என்னதான் எமது தோழர்கள் சூழநின்று தகன நிகழ்ச்சிகளை நடாத்தினாலும் கூட அப்போராளியைப் பெற்று - சீராட்டி வளர்த்த தாய்-தந்தையரோ அல்லது உடன் பிறந்தவர்களோ அங்கே இல்லாதது எமது மனதை நெருடுகின்றது.

போராட்ட சூழல் காரணமாக அவர்கள் வரமுடியாது விட்டாலும் நாளை இப்பெற்றோர்களுக்கு அவர்களது பிள்ளையின் நினைவாக நாங்கள் எதைக் காட்டப்போகின்றோம்?

ஒன்றன்பின் ஒன்றாய் நூற்றுக்கணக்கான போராளிகளை தகனம் செய்த சாம்பல் மேட்டையா காட்டப்போகின்றோம்.

அப்படியான சூழலில் அவர்கள் படும் துயரையும், அங்கலாய்ப்பையும் அனுபவவாயிலாக நாம் அறிந்து இருக்கின்றோம்.

எனவே தான் தனது பிள்ளையின் உடலைப் பார்க்காதுவிட்டாலும் கூட அவனது உடல் புதைக்கப்பட்ட கல்லறையை பார்த்து ஓரளவு ஆறுதல் அடையவாவது நாங்கள் உதவி செய்வோம். அத்துடன் அடிக்கடி அக்கல்லறைக்குச் சென்று அவனது நினைவுகளை மீட்டுப் பார்ப்பதுடன் ஓர் ஆத்ம திருப்தியையும் அவர்கள் அடைந்துகொள்வார்கள்.

கல்லறைகள் அமைத்து அடிக்கடி அங்கே செல்வது சோகத்தைத் தொடர்ந்தும் மனங்களில் வைத்திருப்பதற்காகவா? ஒரு கேள்வி எழலாம்.

போராளிகளின் கல்லறைகள் மக்களின் உள்ளத்தில் சுதந்திரச் சுடரை ஏற்ற உதவும் நெருப்புக் கிடங்குகளாகும்.

அன்புக்குரியவர் ஒருவரின் சாவு சோகமானது தான். ஆனால் அந்தச் சோகத்தை மறக்கவேண்டும் என்பதன் அர்த்தம் அவரை மறக்க முயற்சிப்பதாக இருக்கமுடியாது தானே.

கல்லறைக்கு மீண்டும் மீண்டும் செல்வதால் சோகம் அதிகரிக்கும் என்றில்லை, உண்மையில் அப்படிச் செய்வதால் மனம் நிம்மதி அடையும்.

எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. தகனம் செய்வதற்குப் பதிலாக புதைப்பது என்பது தமிழர் பண்பாட்டுக்கு முரணான செயலல்லவா? என யாராவது வினா எழுப்பலாம்.

காலம்தொட்டு இருந்து வரும் தகனம் செய்வது தமிழரின் பண்பாடு என எண்ணுவது தவறானது. உண்மையில் பண்டைய தமிழர் பண்பாட்டில் இறந்தவர்களது உடல் புதைக்கப்பட்டு நடுகல் வைக்கப்பட்டதாக போதுமான வரலாறுகள் உண்டு. புறநானூற்று இலக்கியமும் ஈமத்தாளி வடிவிலான தொல்லியல் சான்றுகளும் நடுகற்களும் இதை நிரூபிக்கப் போதுமானது.

ஆனாலும் இந்த ஆராய்ச்சிகள் ஒரு புறமிருக்கட்டும், உண்மையில் இந்த முறையை ஒரு சமூக சீர்திருத்தமாக நாங்கள் செய்யவில்லை இது போராளிகளுக்கு மட்டுமே பொருந்தும். பொதுமக்களிற்கல்ல. எனவே இங்கே பண்பாட்டுப்பிரச்சனை எழநியாயமில்லை. அத்துடன் புதைப்பது என்ற முடிவானது வெறும் இறுதிக் கிரியை நிகழ்ச்சி அல்ல. அது போராட்டத்தை உயிர்ப்புடன் என்றென்றும் வைத்திருக்கும் ஒரு சரித்திரத் தியாகத்தின் சின்னம்.

சரி அப்படி புதைத்து எழுப்பப்பட்ட கல்லறைகளை இராணுவம் அழிக்காதா?

அப்படி நடந்தால் வீரமரணமடைந்த போராளிகள் அவமதிக்கப்பட்டது போலாகாதா?

எனவே இந்த அவமதிப்புக்கு புலிகளே சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கலாமா? எனவும் கேள்வி எழலாம்.

தியாகி சிவகுமாரனுக்கு உரும்பராயில் அமைக்கப்பட்ட

(4ம் பக்கம் பார்க்க)

★ தமிழீழ மாவீரர் நாள் — 1992

## மாவீரர்களே!

உலகமே வியக்கும் தலைவனைப் பெற்றோம்
உயிரினைக் கொடுக்கும் வீரரைப் பெற்றோம்
கலக்கமா உனக்கு? இனி எதற்கு? - வா
களத்தினில் ஆடுவோம் எடு துவக்கு.

— தமிழீழ மாவீரர் பணிமனை

ஜனாதிபதி செயலாளர் கொலைமுயற்சி

# தமிழ்இளைஞனும், யுவதியும் கிரிலப்பனையில் கைது

(கொழும்பு)

ஜனாதிபதியின் செயலர் மீது மேற்கொள்ளப்பட இருந்த கொலை தொடர்பாகவும், அங்கு நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாகவும் கிருலப்பனையில் உள்ள வீடொன்றில் வைத்து தமிழ் இளைஞர் ஒருவரையும், யுவதி ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பயன்படுத்தியதாகக் கூறப்படும் ஏ கே-47 ரைபிளை இந்த வீட்டிலிருந்தே பொலிஸார் மீட்டுள்ளனராம்.

இந்த ரைபிளிலிருந்து இரு வேட்டுக்கள் தீர்க்கப்பட்டிருந்தன. சமையல் அறையினுள் ரீசேர்ட் ஒன்றினுள் சுற்றப்பட்ட நிலையில் இந்த ரைபிள் கண்டுபிடிக்கப்பட்டது. (சி)

### இலங்கையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ள ஜப்பானிய வர்த்தக குழுவின் தலைவர் ஹயாச்சி கூறியுள்ளார்.

வெளிநாட்டவர் இலங்கையில் முதலீடு செய்வதை தடுக்கவும் தீவிரவாதிகள் இவ்வாறான வன் செயல்களைச் செய்யக்கூடும். இந்த வன்முறைகள் இங்கு தொடர்ந்து நடைபெறுவதினால் இலங்கையில் முதலீடுகளை செய்வதா இல்லையா என்பதை நன்கு சிந்தித்தே செயல்படவேண்டி இருக்கின்றது என்று திரு. ஹயாச்சி மேலும் தெரிவித்துள்ளார். (வி)

### கொழும்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தங்கி உள்ளவர்களின் பெயர்ப் பட்டியல் அந்தந்தப் பகுதி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

குடும்ப அங்கத்தவர் வேறாகவும் மற்றும் தங்கியுள்ள ஆட்கள் வேறாகவும் பட்டியலில் காட்டப்பட வேண்டும்.

இந்தப் பிரமாணத்தின்படி புதியவர் ஒருவரைப் பற்றி அறிவிக்காமல் மறைப்பவர்கள் குற்றவாளியாகக் கணிக்கப்படுவார் என்று அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (சு-ரி)

# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## ந. சபாரத்தினம்

(ஓய்வுபெற்ற அதிபர், யாழ். இந்துக் கல்லூரி)
(1964 — 1971)

எம்மிடையே வாழ்ந்த அறிவு மேதை
இந்துவின் மைந்தன்
கல்லூரியின் முன்னாள் அதிபர்
அன்னாரின் பிரிவு
எமை ஆறாத் துயரில் ஆழ்த்தியுள்ளது.
அன்னார் ஆத்மா சாந்தியடைய
இறைவனை இறைஞ்சி
எமது அஞ்சலியை
சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
22-11-1992. (ஏ-2608)

# மரண அறிவித்தல்

## நமசிவாயம் சபாரத்தினம்

இளைப்பாறிய யாழ். இந்துக் கல்லூரி அதிபரும், முன்னாள் 'ஈழநாடு' ஆசிரியருமான திருவாளர் நமசிவாயம் சபாரத்தினம் 22-11-92 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் காலமானார். அன்னார் லீலாவதியின் அன்புக் கணவரும், சிவாம்பிகை, டாக்டர் சிவகுமாரன், வாமதேவன், சோமநாதன், ராஜகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், டாக்டர். ஜெகதாசன். ஜெகநாயகி, டாக்டர், புவனேஸ்வரி, டாக்டர் கலைவாணி ஆகியோரின் மாமனாரும். தர்ஷினி, அர்ச்சுனா, ஆரணி ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமைக்கிரிகைகள் இன்று திங்கட்கிழமை 23-11-92 காலை 11-00 மணிக்கு 110, அம்பலவாணர் வீதி, அத்தியடியில் நடைபெற்று தகனக்கிரிகைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு 12-00 மணிக்கு எடுத்துச்செல்லப்படும். தயவுசெய்து உற்றார், உறவினர், நண்பர்கள், இவ்அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
டாக்டர் ச. சிவகுமாரன்

முகவரி:
110, அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம். (சி-2609)

தனித்தனி மாகாண சபை அடிப்படையில்

# சமஷ்டி முறையில் தீர்வுகாண முஸ்லிம் எம். பி.க்கள் முடிவு

(கொழும்பு)

இலங்கை இனப் பிரச்னைக்கு வடக்கு-கிழக்கிற்குத் தனித்தனி மாகாண சபை என்ற அடிப்படையில் சமஷ்டி முறையிலான தீர்வு காண, அமைச்சர் ஹமீத் தலைமையில் கூடிய முஸ்லிம் எம். பி.க்கள் முடிவு செய்துள்ளனராம்.

கடந்த வாரம், ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி, ஈரோஸ், முஸ்லிம் காங்கிரஸ் கட்சிகளின் முஸ்லிம் எம்.பி.க்கள் அமைச்சர் ஹமீத் தலைமையில் கூடிய போது இந்த முடிவை மேற்கொண்டனர்.

இனப் பிரச்னைத் தீர்வுக்கு முன்வைக்கப்பட்டிருக்கும் சமஷ்டி அமைப்பு முறை யோசனையை, பிரதான அரசியல் கட்சிகளும், சிங்களக் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், தாமும் அதனை வரவேற்பதாகச் சகல முஸ்லிம் எம். பி.க்களும் தெரிவித்துள்ளனர். (சி)

### முக்கிய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு ஆரையம்பதியிலிருந்து புலிகளின் தற்கொலைப் படையின் இரண்டு பிரிவுகள் கொழும்பு வந்துள்ளதாகப் புலனாய்வுப் பிரிவினர் எச்சரித்துள்ளனர்.

இதையடுத்தே முக்கிய பிரமுகர்கள், அரசியல்வாதிகளின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், கண்காணிப்பு வேலைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### ஈழநாடு முன்னாள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபரான இவர் இளைப்பாறிய பின்னர் சமூக சமயத் தொண்டுகளில் ஈடுபட்டுவந்ததுடன் 'ஈழநாடு' நிர்வாக ஆசிரியராகவும் கடமையாற்றினார்.

'ஈழநாடு' பத்திரிகையில் இவர் எழுதிய ஆசிரியர் தலையங்கங்கள் தொகுக்கப்பட்டு 'ஊரடங்கு வாழ்வு' என்னும் தொகுப்புநூல் இந்தியாவில் வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### போராளிகளின்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சிலையையும் மன்னர் தளபதி வெ கேணல். கிட்டரது கல்லறையும் சிங்களப் படைகள் சிதைத்ததையும் மனதில் வைத்து மேற்குறித்த கேள்வி எழுவது நியாயமானது.

போரில் கொல்லப்பட்ட எதிரி இராணுவ வீரனது கல்லறைக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்பது சாதாரண போர்த்தர்மம் ஆனால் அதை சிங்கள இராணுவம் கடைப்பிடிக்கும் என உறுதி கூறமுடியாதுதான்.

ஆக்கிரமிப்பு இராணுவமாக இங்கு செயற்பட்டு அதனால் கொல்லப்பட்ட இந்திய ஜவான்களுக்காக இந்திய அரசு எமது மண்ணிலேயே அமைத்த நினைவுச் சின்னங்களை இந்தியப்படைகள் வெளியேற்றப்பட்ட பின்பும் கூட நாம் உடைத்தெறியவில்லை என்பதை இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகிறோம்.

ஆனால் எமது மண்ணில் எமது போராளிகளுக்கு எமது மக்கள் அமைத்த நினைவுத் தூண்களையும், கல்லறைகளையும் சிங்கள இராணுவம் உடைத்தெறிவதையிட்டு நாம் கவலை கொள்ளத் தேவையில்லை. வேண்டுமானால் அதையிட்டு சிங்கள இனம் வெட்கப்படட்டும்.

இறுதியாக ஒன்று சொல்கின்றோம். முழுமையாகவே எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எமது தாய் மண்ணை விடுவிக்கும் போரில் வீரமரணமடையும் ஒரு வீரவேங்கை கேட்பது ஆறு அடி நிலத்தை மட்டுமே.

(ஐப்பசி – கார்த்திகை, 1991 விடுதலைப் புலிகள் பத்திரிகையில் வெளிவந்தது)

# வடக்கு-கிழக்கைப் பிரிக்கும் எந்த யோசனையையும் ஏற்கப்போவதில்லை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கைப் பிரித்து தனித்தனி மாகாண சபை என்ற ரீதியில் இனப் பிரச்னை தீர்வாக வைக்கப்படும் எந்த யோசனையையும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை எனத் தமிழர் விடுதலைக் கூட்டணியும், தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் கூறியுள்ளன.

வடக்கு-கிழக்கை நிரந்தரமாக இணைத்து, இதையொட்டி முன்வைக்கப்படும் யோசனைகளைப் பரிசீலிக்கத் தாங்கள் தயாராக இருப்பதாகவும் இக்கட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வடக்கு-கிழக்கை நிரந்தரமாகப் பிரித்து தனித்தனி மாகாண சபை என்ற ரீதியில் தீர்வு யோசனைகளை முன்வைத்த ரெலோவையும், ஈ. என் டி. எல். எவ்.வையும் தமிழ்க் கட்சிகளின் கூட்டணியிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு குமார் பொன்னம்பலம் கூறியுள்ளார். (சி)

### செம்மணிப்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

டுள்ள இக்காட்சியை பார்வையிட தினமும் பெருந்தொகையான மக்கள் செம்மணி பகுதியை நோக்கிப் படையெடுத்த வண்ணமுள்ளனர்.

ராணுவ முகாம் நோக்கி தாக்குதல் நடத்தியவாறு சீருடைதரித்த விடுதலைப் புலிகள் முன்னேறுவதும் முகாமின் சுற்றுடலில் ஏனைய விடுதலைப் புலிகள் பாதுகாப்பு அரண்களுக்குள் நின்று தாக்குதல் நடத்துவது போன்றும் இம்மாதிரி அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. (159)

### வடக்கு-கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் தற்போது ஏற்பட்டுவரும் இக்கட்டான நிலை குறித்து அரசியல் வட்டாரங்களும் தெரிவித்திருப்பதாவது:

அண்மையில் தலைநகர் கொழும்பில் பாதுகாப்பு மிகுந்த பகுதி ஒன்றில் புலிகளின் தற்கொலைப் படையின் தாக்குதலுக்கு இலக்காகிய கடற்படைத் தளபதி அட்மிரல் கிளான்ஸி பெர்னாண்டோவின் மரணம், இந்த நிலையை உறுதிப்படுத்துவதாக அமைந்துவிட்டது.

தொடர்ந்தும் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் பாரிய தாக்குதல்களை மேற்கொள்ளவோ அல்லது குறிப்பிட்ட தாக்குதல்களில் வெற்றி பெறவோ முடியாத ஒரு நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில்தான் புலிகளின் தற்கொலைப் படையின் தாக்குதல் கொழும்பில் ஆரம்பமானது. இதற்கு ஸ்ரீலங்காப் படையின் உயர்நிலை அதிகாரி ஒருவர் பலியானார்.

இந்த இழப்பை ஈடுசெய்வதற்கு ஸ்ரீலங்காப் படையினருக்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதை அளவிட்டுக் கூறமுடியாது.

இந்தத் தாக்குதல் தென்பகுதியிலுள்ள அரசியல்வாதிகள், பாதுகாப்புப் படையினர், வெளிநாட்டு இராஜதந்திரிகள், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

புலிகளுடன் போரிடுவதற்கு வடக்கு கிழக்கு நோக்கிப் போகும் நிலை மாறி, அவர்களின் சவால்களைச் சந்திப்பதற்குத் தெற்கிலேயே போரிடும் நிலைக்கு அரசு இப்போது தள்ளப்பட்டுவிட்டது.

### பொம்மர்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யளவில் சுற்றி வட்டமிட்டன.

பொம்மர்களின் நடமாட்டத்தையடுத்து பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி ஒதுங்கினர். (61-160)

### பாதுகாப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அங்கத்தவர் நிமல் சிறிபால பாராளுமன்றத்தில் கூறினர்.

அவசரகால நிலையை காலத்துக்குக்காலம் அரசாங்கம் நீடித்து, ஆட்சியைக்கொண்டு செல்கிறது என்றும் அரசாங்கத்தைக் குற்றம் சாட்டினர்.

### கல்முனை

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

அந்தக் குண்டு பஸ்ஸிலிருந்து வெளியே அகற்றப்பட்டு, 5 நிமிடங்களின் பின்னரே வெடித்தது என்றும், சேதங்கள் இல்லை என்றும் கூறப்படுகிறது.

பார்சல் குண்டு வைக்கப்பட்ட பஸ் கல்முனையிலிருந்து மண்டூருக்குப் புறப்பட இருந்ததென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (சு-ரி)

### கொழும்பு நகரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்டுள்ளது.

முக்கிய நகரங்களில் கேந்திர இடங்களிலும், மக்கள் கூடும் பகுதிகளிலும் தாக்குதல் ஏதும் நடைபெறலாம் என்ற முன் எச்சரிக்கை நடவடிக்கையாகவே இவ்வாறு படையினர் குவிக்கப்பட்டுள்ளனராம்.

கொழும்பில் தற்போது பல இடங்களில் வீதிச் சோதனை முகாம் போடப்பட்டதுடன் வீதியில் வேகத்தடையும் போடப்பட்டுள்ளதாம். (சி)

### மாவீரர் தின

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.பெருமாள் கோவிலடியிலும் கொண்டாவில் சந்தி பலாலி வீதியிலும் நல்லூர் பருத்தித்துறை வீதியிலும், குருநகர் விகாரர் நினைவுத்தூபிக்கருகாமையில் அமைந்துள்ள வெளியிலும் ஏராளமான மாவீரர்களின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

வீதிகள் எங்கும் ஒலிபெருக்கிகளிலும் மாவீரர் புரட்சிக் கீதங்கள் ஒலித்தபடியிருந்தன. அத்துடன் வாகனங்களிலும் தமிழீழ எழுச்சிப்பாடல்கள் ஒலித்துக்கொண்டிருந்தன. கல்லியங்காடு 3-ம் கட்டையடியில் போராட்டத்தைச் சித்தரிக்கும் 30 அடி உயரத்திலான மின்குமிழ் பொருத்தப்பட்ட கட்டவுட் நேற்று இரவு வரையில் பொருத்தப்பட்டுக் கொண்டிருந்தது.

மக்கள் நேற்று உணர்வுடனும், உற்சாகத்துடனும் மாவீரர்தின எழுச்சி தினத்தில் கலந்து கொண்டனர். (56)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு நவம்பர் மாதம் 23ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a New Paper at the General Post office, Sri Lanka under Licence Number B/I0336/8